# நண்பர் யக்ஞராமன்

**மெரீனா**



என் அத்தானின் ஒன்றுவிட்ட அத்தையின் நாத்தனாரின் பெரிய மாமனாரும், என் அம்மாஞ்சியின் சித்தியின், மாமியாரின் தம்பியும் ஒன்றுவிட்ட சகோதரர்கள் என்றால் இந்த உறவுமுறை உங்களுக்குப் புரிகிறதா? இம்மாதிரியான உறவுமுறைதான் எனக்கும் கர்னாடக சங்கீதத்திற்குமிடையேயுள்ள சம்பந்தம்! இது அவையடக்கமல்ல; எல்லாமே இதனுள் அடக்கம்!!

எனது கேள்வி ஞானம், ஒரு சில ராகங்களின் பெயர்கள்தான். அவற்றை என்னிரு கைவிரல்களுக்குள் அடக்கிவிடலாம். மிருதங்கம், கடம், கஞ்சிரா தெரியும். ஆனால் தாளங்கள் பற்றி ஏதும் அறியேன் பராபரமே. ஸ்வரம், நிரவல்களின் நெளிவு சுளிவுகள், மேல்ஸ்தாயியில் சஞ்சாரம் பண்ணுவது, கீழ்தாயியில் விவகாரம் பண்ணுவது, மத்தியஸ்தாயியில் சங்கதிகளை உதிர்ப்பது இந்த சங்கதிகளிலெல்லாம் வீணாக தலையிடுவதில்லை.

தம்புரா தெரியும்; ஸ்ருதி பேதம் புரியாது. ஸ்ருதியை விட்டு விலகினால் என் கவனம் சிதறி ஒருவித டிப்ரஷன் ஏற்படும், அவ்வளவுதான். அபஸ்வரம் தலைநீட்டினால் என் நாடி நரம்புகள் புடைத்துக்கொள்ளும். ஸ்வர ஞானம், கல்பனாஸ்வரம், ஜீவஸ்வரம், சிட்டைஸ்வரம், நெட்டைஸ்வரம்... இதெல்லாம் ஒரு மண்ணும் புரியாது.

காலப்பிரமாணம், மனோதர்மம், கமகம், நிஷாதம், குறைப்பு, அந்தர காந்தாரம், சர்வலகு, சுத்த மத்தியம், கோர்வை, கார்வை, போர்வை இவையெல்லாம் அடியேனுக்கு அந்நியமானவை. தமிழ் கிராமரைவிட மோசமானது எனது சங்கீத இலக்கண ஞானம்.

சங்கீதம் கேட்கும்போது நான் அமைதியாக சாந்தமாக சௌக்கியமாக இருந்தால் பாடகர் நன்றாகப் பாடுகிறார் என்று நினைத்துக்கொள்வேன். வேறொன்றுமே தெரியாது.

சங்கீத நுணுக்கங்களில் நிரட்சர குட்சியான எனக்கும் கிருஷ்ண கான சபாவுக்கும் எப்படி சம்பந்தம் ஏற்பட்டது என்றுதானே ஆச்சரியப்படுகிறீர்கள்? சற்று விஸ்தாரமாகவே சொல்கிறேன். அப்போதுதான் புரியும். பொறுமை காக்க!

சுமார் அறுபது வருடங்களுக்கு முன், நான் தி.நகர் ராமகிருஷ்ணா மெயின் ஸ்கூலில் படித்துக்கொண்டிருந்தபோது எனக்கு ராமநாதன் என்றொரு ஃப்ரெண்டு. அவனும் யக்ஞராமனும் இணைப்பிரியாத தோழர்கள். அவர்கள் மாலை நேரத்தில் பேசிக்கொண்டே வாக் போவதைப் பார்த்திருக்கிறேன். அதிக ஜனசந்தடியற்ற, வாகன நெருக்கடி இல்லா அந்தக் காலத்தில் சாது மாதிரி இருந்த உஸ்மான் ரோடில் ராமனாதனின் வீடு. ரங்கநாதன் தெருவையடுத்த ராமநாதன் தெருவில் யக்ஞராமனின் இல்லம்.

யக்ஞராமனைவிட ராமநாதன் சற்று ரிச் கலர். சதா சிரித்த முகம். இருவரும் பளிச்சென்று டிரஸ் செய்து கொள்வார்கள். இஸ்திரிகோடு கலையாது. யக்ஞராமன், பட்டைக்கரை ஜரிகை வேஷ்டி, சில்க் ஷர்ட், மோதிரம், ரோல்ட் கோல்டு பட்டன், தங்கத்தில் வாட்ச் ஸ்ட்ராப், கழுத்தில் மின்னும் மெலிதான கோல்டு செயின். ரிம்லெஸ் மூக்குக்கண்ணாடி என்ற நினைவு. இருவரும் ஸ்லோ நடையில் செல்லும் அழகை கம்பன் பார்த்திருந்தால் 'ஆடவரும் பெண்மையை அவாவும் இரட்டையர்' என்று வர்ணித்துப் பூரித்துப் போயிருப்பார்!

இரட்டையர் சில சமயம் சைக்கிளிலும் போவதுண்டு. (நாங்கள் கச்சேரி கேட்பதற்காக மாம்பலத்திலிருந்து பெரம்பூர் சங்கீத சபாவுக்கு சைக்கிளில் போய்வருவோம் என்று பின்னர் யக்ஞராமன் கூறியிருக்கிறார்.)

நடந்து போகும்போது, நான் அவர்களைக் கடந்து சென்றாலோ, எதிரில் வந்தாலோ ராமநாதன் ஜம்பமாக என்னைப் பார்த்துப் புன்முறுவல் புரிவான். யக்ஞராமன் கண்டுகொள்ளவே மாட்டார். அவன் ஒரு நிமிடம் நின்று என்னுடன் பேச்சுக் கொடுத்தால் கூட இவர் நிற்கமாட்டார். நடந்து கொண்டேயிருப்பார். சர்வ அலட்சியம், ஒரு கிதாப்பு, அசல் கடைந்தெடுத்த தஞ்சை மண்ணின் ஜபர்தஸ்து!

(இப்போது மட்டுமென்ன? ஆயிரம் பிறைகள் கண்டவரின் நடை சற்று தளர்ந்திருக்கிறதே தவிர, உள்ளுக்குள்ளே அதே மிடுக்கும், மிராசுத்தனமும்தான். உடையில் அதே பட்டும் பளிச்சும்தான். வயதுக்கேற்ற சில்க் துண்டோ, காஸ்ட்லி ஷாலோதான்).

மனுஷன் பரமரசிகர். நல்ல ரசிகர்களால்தான் கர்னாடக சங்கீதம் தழைத்தோங்குகிறது என்பதில் என்ன சந்தேகம்?

இதெல்லாம் சரி. எனக்கு கிருஷ்ண கான சபாவுடன் எப்படித் தொடர்பு ஏற்பட்டது? அவசரப்பட்டால் எப்படி? பின்னணியைக் கூறவேண்டாமா?

எனக்கு ராமநாதன் மூலம் யக்ஞராமன் பரிச்சயம். யக்ஞராமனால் கிருஷ்ண கான சபாவின் அறிமுகம். அதற்கு முன் கிருஷ்ண கான சபா இருந்த திக்குதான் தெரியும். தொடக்கக் காலத்தில் பனகல் பார்க்கின் தென்புறமுள்ள நாகேஸ்வர தெருவில் ஒரு பெரிய கீற்றுக் கொட்டகையில் அது இயங்கிக்கொண்டிருந்தது. நான் மழைக்குக்கூட அதனுள் ஒதுங்கியதில்லை.

பின்னர், (மகாராஜபுரம்) சந்தானத்திற்கும் யக்ஞராமனுக்கும் செயலாளர் பதவி குறித்து ஏற்பட்ட தீவிர லடாய் மாம்பலத்தில் அமர்க்களப்பட்டது. இரு கோஷ்டிகளாகப் பிரிந்து பாலிடிக்ஸ் தீவிரமாயிற்று. இதில் எந்த சம்பந்தமுமில்லாத நாங்கள் இரண்டு மூன்று பேர் வெறும் அக்கப்போருக்காக மூக்கை நுழைத்துக் குட்டையைக் குழப்பினோம். இங்கொன்றும், அங்கொன்றுமாக காதில் விழுந்த பேச்சுக்களை, வதந்திகளாக உலவவிட்டு, இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிக்கொண்டு திரிவோம். உள்ளே என்ன நடக்கிறது என்பதே தெரியாது.

ஒரு நாள் யக்ஞராமன் காரியதரிசியாக அறிவிக்கப்பட்டார். சில மாதங்களுக்குப் பின்னர், எழும்பூரைச் சேர்ந்த ஓர் ஆசாமி எப்படியோ கமிட்டிக்குள் நுழைந்து, சில மெம்பர்களை தன் பக்கம் சேர்த்துக்கொண்டு, மல்லுக்கு நின்று, கணக்குக் கேட்கிறேன் பேர்வழியென்று ரகளை செய்ததன் காரணமாக யக்ஞராமன் சில மாதங்கள் காரியதரிசி பதவியிலிருந்து விலகியிருந்த காலம் பரபரப்பாகப் பேசப்பட்ட நேரமாகும்.

எழும்பூரிலிருந்து வந்த நபர், முத்தய்யா செட்டியார் ஸ்கூலில் என் கிளாஸ்மேட்டான ஜகந்நாதனின் சகோதரர் என்று அறிந்தபோது, இந்தப் பிரச்னையில் சற்று அதிகப்படியாகவே இன்ட்ரஸ்ட் காண்பித்து, எப்பக்கமும் சாயாமல், புழுதிவாரி இறைப்பதில் சில மாலைப் பொழுதுகள் கழிந்தன.

சில மாதங்களில் யக்ஞராமனே மீண்டும் செயலாளராகிவிட்டார். கிருஷ்ண கான சபா பற்றிய என் சுவாரஸ்யம் குறைந்து, ஆல்மோஸ்ட் மறைந்தேவிட்டது!

அதற்குப் பின்னர் சபா தேர்தல் சந்தடி சச்சரவு எதுமின்றி சமத்தாக நடந்தால் யக்ஞராமன் மாநகராட்சித் தேர்தலில் குதித்தார்! நான் சுறுசுறுப்பாகி விட்டேன்.

அப்போதெல்லாம் பாலிடிக்ஸ்தான் என் உயிர்மூச்சு. தேர்தல் என்றாலே என் உடலில் முறுக்கேறிவிடும். நான் ஒரு காங்கிரஸ் வெறியனாக இருந்த காலம் அது. யார் காங்கிரஸை எதிர்த்து நின்றாலும் அவர் என்னை எதிர்ப்பதாகவே ஒரு வெறி பிடித்து என்னை உலுக்கிவிடும்.

யக்ஞராமன் காங்கிரஸ் கட்சிக்கு எதிராகப் போட்டியிட்டதால், நுங்கம்பாக்கம்வாசியான நான் எல்லைக்கடந்து சென்று அந்தத் தேர்தலில் தீவிர கவனம் செலுத்தினேன். யக்ஞராமன் தோல்வியைத் தழுவினார். நல்லவேளை அரசியல் அவரை ஒதுக்கியது. அது சபாவுக்கு நல்லகாலமாக அமைந்துவிட்டது. அதற்கு முழுநேர பாதுகாவலர் கிடைத்து விட்டார்!

சபா கிரிஃபித் சாலைக்குள் குடிமாறிய பிறகுதான் அதனுள் நான் முதன்முதலாக நுழைந்தேன். அப்போது ராமநாதன் துணைக் காரியதரிசியாக அங்கே பிஸியாக அலைந்து கொண்டிருப்பான். அப்போது அவன் டாக்டருக்குப் படித்துக்கொண்டிருந்ததாக நினைவு. அவனைக் காணச் சென்ற நான் யக்ஞராமனுடன் பழகத் தொடங்கினேன். தஞ்சை மண்ணும் காவிரி நீரும் எங்கள் நட்புக்கு ஒரு பாலமாக அமைந்தது. பரஸ்பர அண்டர்ஸ்டாண்டிங் வளர வளர, இதைச் பேசலாம், இதை பேசக்கூடாது என்ற எல்லைக்கோடுகள் அழிக்கப்பட்டன. தடுப்புச் சுவர்கள் தகர்த்தெறியப்பட்டு, அன்னியோன்னியம் மடைதிறந்தது போல் பீறிட்டுப் பெருகியது. வாழ்க்கையின் பல்வேறு ரசனைகள் இருவருக்கும் பொதுவாக அமைந்திருந்தன. ஏறத்தாழ ஒரே 'வேவ் லெங்க்த்'. முக்கியமாக நகைச்சுவை உணர்வு. பல்வேறு தரப்பட்ட நபர்களைப் பற்றிய விமரிசனங்களும் அலசல்களும் அன்றாட அலுவல்களாயின. சபா அலுவல்கள் பற்றிய அந்தரங்க செய்திகளை என்னுடன் பகிர்ந்து கொள்வார். ஒருவர் நம்பிக்கைக்கு மற்றவர் பாத்திரமானோம். பழகப் பழக, பலருக்கு இரும்பு மனிதராகத் தோற்றமளிப்பவரை, நல்லெண்ணம் மிக்க இளகிய நெஞ்சினராய் கண்டேன் நான். சங்கீதம் என்னை சபாவுடன் பிணைக்கவில்லை. யக்ஞராமனின் தங்கமான நட்புள்ளம் இணைத்து வைத்தது.

டாக்டராகிவிட்ட ராமநாதன் காரைக்குடிக்கு குடிபெயர்ந்து விட்டான். யக்ஞராமனின் வலக்கரமான இணைக் காரியதரிசி வெங்கடேச்வரனும், இணைப்பிரியாத் தோழர் ராதாகிருஷ்ணனும் எனது ஆப்த நண்பர்களானார்கள். மாலைவேளை சபா 'ப்ரெமிஸிஸ்' எனக்கு மெரீனா கடற்கரையாயிற்று. அரட்டைக் கச்சேரியும், கேலியும் சிரிப்பும் கும்மாளமும் 'ஏ ஒன்' பொழுதாகக் கழிந்தன.

ஆபீஸ் அறையில் உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருப்போம். கான்டீனிலிருந்து டிபன் காபி வரும். யார் யாரோ வந்து போய்க்கொண்டிருப்பார்கள்.

சிலர் என்னெதிரில் எதையோ கேட்கவோ, சொல்லவோ சற்று தயங்குவார்கள். அவருடைய தர்மசங்கடத்தைப் புரிந்துகொண்டு மெள்ள நழுவப்பார்பேன். அதைக் கவனிக்கும் ஆர்.ஒய். 'நீங்க இருங்கோ' என்பார். வந்தவர் 'அப்புறம் வரேன்', 'வீட்டுக்கு போன் பண்றேன்' என்று எதையோ கூறி நழுவிவிடுவார். 'அவர் எதுக்கு அடி போடறார்னு எனக்குத் தெரியும். அதனாலேதான் உங்களை இங்கேயே இருக்கச் சொன்னேன்' என்பார். மனுஷன் எமகாதகர். எத்தனை பேரை, எத்தனை விதமாக எத்தனை சாதுர்யமாக சமாளிக்க வேண்டியிருக்கிறது!

கச்சேரியோ, டான்ஸோ தொடங்கிவிடும். ஐந்து நிமிடம் ஆனதும் ஆபீஸ் அசிஸ்டெண்ட் நாராயணன் உள்ளே வருவான். 'gate எப்படி?' என்று கேட்பார் காரியதரிசி. வசூல் கணிசமாக இருந்தால் அவர் முகம் மலரும். எதிர்பார்த்த அளவு இல்லாவிட்டால் ஒளி சற்று மங்கும். கச்சேரியாக இருந்தால் 'வாங்களேன், கொஞ்ச நேரம் பாட்டைக் கேட்டுட்டு வரலாம்' என்று கூறி எழுந்திருப்பார். டான்ஸாக இருந்தால் 'நன்னா இருக்கும். கொஞ்சம் பார்த்துட்டு வரலாம் வாங்கோ' என்று தூண்டுவார். நானும் மரியாதைக்காக உடன் சென்றுவிட்டு சற்றைக்கெல்லாம் எழுந்து வந்துவிடுவேன்.

சில காலம் இது தொடர்ந்தது. யாராவது என்னை 'ஓசி' என்று கருதிவிடப் போகிறார்களே என்ற தன்மான உணர்வு மேலோங்க ரெகுலர் மெம்பராகிவிடுவது என்று முடிவுசெய்து, அதற்கான செக்கை ஆபீஸில் செலுத்தத் தொடங்கினேன். யக்ஞராமன் கண்டு கொள்ளவில்லை. சில வருடங்கள் கடந்த பின்னர், "உங்களை நிர்வாக கமிட்டி மெம்பராக்கியிருக்கிறேன். இதுலே கையெழுத்துப் போடுங்கள்" என்றார் ஒரு நாள், போட்டேன்.

1979-ம் ஆண்டு பொங்கல் தினத்தன்று நானும், நண்பர்களும் 'ரசிகரங்கா' நாடகக் குழுவைத் தொடங்கினோம். என் அழைப்பை ஏற்று அன்று வருகை தந்த யக்ஞராமன் துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் என் நாடக ரிகர்சல்கள், கிருஷ்ண கான சபா ஹாலில் நடைபெறத் தொடங்கின. அவற்றுக்கு யக்ஞராமன் அளித்து வந்த ஒத்துழைப்பு மகத்தானதாகும். 'ஓசி' இல்லை. எங்களால் இயன்ற அளவு 'வாடகை' கொடுத்து விடுவோம். என் நாடகங்கள் அனைத்திற்கும் - சிலவற்றை இரண்டு முறைகள் கூட - வாய்ப்பளித்திருக்கிறார். சென்னையிலேயே அதிகப்படியாக கிருஷ்ண கான சபாவில் இதுவரை 28 ரசிகரங்கா நாடகங்கள் மேடையேறியிருக்கின்றன.

ஸ்ரீ கிருஷ்ண கான சபா நடவடிக்கைகளில் நான் நெருங்கிய ஈடுபாடு கொண்டதன் காரணமாக எங்கள் நட்பு ஆத்மார்த்தமாகப் பரிணமித்தது. ஸ்ரீகாஞ்சி மகா சுவாமிகள், ஸ்ரீகாமகோடி சேஷாத்ரி சுவாமிகளின் நினைவு அறக்கட்டளையைத் தொடங்க ஆசி வழங்கிய ஓரிரு வருடங்களில் யக்ஞராமனும் அதில் ஓர் அறங்காவலராக செயல்படத் தொடங்கினார். மகா சுவாமிகளின் தரிசனத்திற்கு இருவரும் முடிந்தவரையில் சேர்ந்தே போவோம். அதன் பலனாக எனது ஆலயப் பயணங்கள் சிலவற்றில் இவரும் கலந்துகொள்ளத் தொடங்கினார். திருக்காட்டுப் பள்ளியை அடுத்துள்ள இவரது கிராமமான ரங்கநாதபுரத்திற்கு சென்று நாங்கள் இரண்டு மூன்று நாட்கள் சௌகரியமாகத் தங்கி, சுற்றுப்புறமுள்ள பல ஆலயங்களுக்குச் சென்று, தரிசனம் செய்து தகவல்கள் சேகரித்தது மறக்க முடியாத நினைவுகளாகும். அப்போது ஒருநாள் வரகூர் சென்று, விடிய விடிய கண் விழித்திருந்து கிடைத்தற்கரிய உறியடி உற்சவத்தைக் கண்ணாரக் கண்டு இருவரும் உளமாரப் பருகிய பெரும்பேற்றை மறக்கவே முடியாது.

அந்தப் பயணத்தின்போதுதான், ரங்காதபுரம் பெருமாள் கோயிலில் நாங்கள் கண்ட நவநீத நர்த்தன கிருஷ்ணன் எங்கள் மனத்தைக் கொள்ளை கொண்டார். அந்த செளந்தர்யச் சிலையின் பீடத்தில் காணப்படும் யதீந்திரர், ஸ்ரீநாராயண தீர்த்தராக இருக்கலாம் என்று ஸ்ரீ காஞ்சிப் பெரியவர் ஒரு சமயம் கூறியதாக அக்கிராமத்து முதியவர் ஒருவர் கூறக்கேட்டு, அதைப் படம்பிடித்து, விகடனில் வெளியிட்டேன். அப்படம்தான் தற்போது சபா ஸோவினியரின் அட்டையில் ஆண்டுதோறும் காட்சியளிக்கிறது.

ஸ்ரீ காஞ்சி மகானின் அருட் கட்டளையைச் சிரமேற்கொண்டு, ஸ்ரீ லால்குடி ஜயராமனின் நன்முயற்சியால் நிதி திரட்டப்பெற்று திருவாரூரிலுள்ள சங்கீத மும்மூர்த்திகள் வசித்த இல்லங்கள் வாங்கப்பெற்று தற்போது அங்கு ஆண்டுதோறும் ஜயந்தி உற்சவங்கள் நடைபெற்று வருவது அனைவரும் அறிந்ததே. அந்த அறக்கட்டளையில் யக்ஞராமனும் ஓர் அறங்காவலராக இருக்கும் காரணத்தால், ஓராண்டு கட்டாயப்படுத்தி என்னையும் அங்கு உடன் அழைத்துச் சென்றார். அப்போது லால்குடியாருடனும் வேலூர் ராமபத்திரனுடனும் இரண்டு நாட்கள் மும்மூர்த்திகளின் நிழலில் தங்கி புண்ணிய பொழுதைக் கழித்தது எனக்குப் புது அனுபவமாகும். இந்த இரு சங்கீத மணிகளின் தூய நட்பை நான் பெறக் காரணமாக அமைந்தவை கிருஷ்ண கான சபாவும், யக்ஞராமனும்தான்.

நண்பர் யக்ஞராமனிடம் ஒரு கருத்தையோ யோசனையையோ சொன்னால் அதை உடனேயே ஆமோதிக்கவோ, ஒதுக்கிவிடவோ மாட்டார். மௌனமாகக் கேட்டுக் கொள்வார். ரியாக்ஷனே இருக்காது. அதைப்பற்றி தனக்குள்ளேயே சிந்தித்து பலாபலன்களைச் சீர்தூக்கிப் பார்த்து, ஆழ்ந்து அலசி, ஒரு முடிவு எடுப்பார். அந்த முடிவு சபாவின் வளர்ச்சிக்கும் புகழுக்கும் சாதகமாகத்தான் அமையும். சந்தேகமில்லை.

உதாரணத்திற்கு ஒன்றைக் கூறுகிறேன். ஒரு சமயம் சபா விழாக்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது, ‘சார், ஆண்டுதோறும் சங்கீத விழாவும் நாட்டிய விழாவும் நடத்தி, கலைஞர்களுக்கு சங்கீத சூடாமணி விருதும் நாட்டிய சூடாமணி விருதும் தருகிறோமே. அதைப்போல் நாடக விழா ஒன்றும் நடத்தி, நாடக சூடாமணி விருதும் கொடுக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. நாடகக் கலைஞர்களுக்கு ஆர்வம் பெருகி தமிழில் நல்ல நாடகங்கள் வெளிவர உதவியாயிருக்குமே’ என்று கூறினேன். கேட்டுக்கொண்டார். பதில் பேசவில்லை.

ஒரு நாள் ‘சார், அடுத்த ஏப்ரலிலிருந்து உங்கள் யோசனைப்படியே ‘சித்திரை நாடக விழா’ தொடங்கலாம் என்று முடிவு செய்திருக்கிறேன். ஐந்தாறு நல்ல நாடகங்களாகத் தேர்ந்தெடுத்து சிபாரிசு செய்யவேண்டியது உங்கள் பொறுப்பு. ஒவ்வொரு ஆண்டும் யாருக்கு விருது தருவது என்று நாம் சேர்ந்தே முடிவுசெய்வோம்’ என்றார். அந்த ஆண்டு 1992ல் ‘சித்திரை நாடக விழா’ தொடங்கியது.

இதன் தொடர்பாக மற்றொன்றையும் சொல்லியாக வேண்டும். நான் நினைத்ததும் சொன்னதும் ‘நாடக சூடாமணி’. ஆனால் ‘நடிக சூடாமணி’ என்று அச்சாகி, மெடலிலும் பொறிக்கப்பட்டுவிட்டது. இது நான் எதிர்பாராதது. நான் அவரிடம், ‘நாடகம் என்றால் நாடகாசிரியர் அக்கலையின் அடித்தளம். அவரையும் சேர்த்து **‘நாடக சூடாமணி’** என்று பொதுவாக இருப்பதுதான் பொருத்தமாக இருக்கும்’ என்று எடுத்துக்கூறி, ‘எனக்குக்

கிடைக்காமல் போய்விடுமே என்பதற்காக இப்படிச் சொல்கிறேன் என்று நீங்கள் நினைத்துக் கொள்ளமாட்டீர்கள்' என்று நினைக்கிறேன் என்று தமாஷாகக் கூறினேன். அவர் லேசாக புன்முறுவல் புரிந்தார். 'நீங்கள் சொல்வது சரிதான். சந்தர்ப்பம் வரும்போது மாற்றிக்கொண்டால் போச்சு' என்று அந்த சப்ஜெக்ட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். 2002-ம் ஆண்டில் நாடகாசிரியர் ராதுவுக்கு நாடக சூடாமணி என்று விருது அறிவித்து, 'பார்த்தீர்களா, நீங்க சொன்ன மாதிரியே நடந்துடுத்து. இப்ப திருப்திதானே' என்றார். அசகாய சூரர்.

யக்ஞராமன் சாமர்த்தியசாலி, யமகாதகர், அசகாய சூரர் என்றெல்லாம் ஏற்கெனவே வர்ணித்துவிட்டேன். அவர் ஒரு தந்திரியும்கூட. அவர் மனதில் என்ன நினைக்கிறார் என்பதை எளிதாகக் கண்டுபிடித்துவிட முடியாது. பேச்சில் கண்டிப்பும் கறாரும் வெடிக்கும். ஆனால் எளிதில் இளகிவிடும் ஐஸ்கிரீம் இதயம் அவருடையது.

யாரைக் கொண்டு, எந்தப் பொறுப்பை ஒப்படைத்து, ஒரு பணியை முடித்துக் கொள்ளவேண்டும் என்ற சூட்சுமம் அவருக்கு திருக்குறளைப் படித்து வந்தது அல்ல. உடம்போடு பிறந்தது. அவருடன் நெருங்கிப் பழகி, அவரது அரிய சாதனைகளின் வெற்றிப் பயணத்தை அருகிலிருந்து அறிந்தவர்களுக்கு இது நன்றாகப் புரியும்.

அவர் வக்கீலுக்குப் படித்தவர். கோர்ட் படியேறியதாக எனக்குத் தகவல் இல்லை. ஆனால், சபாவின் வளர்ச்சிக்காக எத்தனை பேர் வீட்டுப் படிக்கட்டுகள் ஏறியிருக்கிறார் என்பதற்கு என்னிடம் கணக்கில்லை. அவர் நாவன்மை படைத்தவர். ஆங்கிலத்தை ஆழமாகப் பயின்றவர். பேசினாலோ, எழுதினாலோ யாரை வேண்டுமானாலும் 'கன்வின்ஸ்' செய்துவிடும் அவரது திறமையை நான் அறிவேன். சபாவின் வளர்ச்சியைக் கண்டு பிறர் மலைப்பதைப் பார்த்து மகிழ்வதைத் தவிர வாழ்க்கையில் இவருக்கு வேறொரு ஆனந்தமிருப்பதாக நான் நினைக்கவில்லை. சபாதான் அவருடைய கனவு, நினைவு, லட்சியம், தியானம், தவம், பூஜை, ஆராதனை, பேச்சு, மூச்சு எல்லாமும்.

மனமொத்தக் குடும்ப சூழல் இவருக்கு பகவான் அளித்துள்ள வரப்பிரசாதம். இசைஞானத்துடன் அன்பும் அறமும் வளர்த்து, இன்முகத்துடன் நல்லறமாம் இல்லறம் பேணிக்காக்கும் மனையாள் தந்தை; ஏற்றுக்கொண்டுள்ள பொதுவாழ்வில் தங்கள் பங்கினையும் ஈந்து, அவர் மனம் கோணாமல் பணியாற்றும் மணிமணியான மைந்தர்கள்; வீட்டுக்கு வருபவர்களை மலர்ந்த முகத்துடன் வரவேற்று உபசரிக்கும் நாட்டுப்பெண்கள்; பாரம்பரிய கௌரவத்திற்கும் பண்புகளுக்கும் இழுக்கு நேரிடா வண்ணம் நாகரிக சூழ்நிலையில் வளர்ந்துவரும் பேரச் செல்வங்கள் - நல்லதொரு குடும்பம் சிறந்ததொரு பல்கலைக்கழகம் என்பதை மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

யக்ஞராமன் சிறுவனாக இருந்தபோது தந்தை அடிக்கடி கூறுவாராம்: 'டேய் பையா, பெரியவனா ஆனப்புறம் நீ வெறும் பயலா இருக்கக்கூடாது. நாலுபேர் போலே ஏதோ உத்தியோகம் பார்த்து நாலு காசு சம்பாதிச்சு மத்தவாபோலே இருந்தா பிரயோஜனமில்லேடா ஊர்லே நாலுபேர் ஓஹோன்னு பேசற மாதிரி, எதையாவது ஒசத்தியா செஞ்சு நீ உன் பேரை பதிக்கணும்டா. அப்பத்தான் எனக்கு சந்தோஷம்டா'. பெற்றவரின் இந்த வேட்கை மகனின் ஆழ்மனத்தில் பதிந்திருக்கவேண்டும்.

தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டார் நண்பர் யக்ஞராமன். அதற்கு இன்று சுவர்ணஜயந்தி கொண்டாடும் கிருஷ்ண கான சபா என்றென்றும் பொன்னான சாட்சியாக புகழ்பரப்பிக் கொண்டிருக்கும்.